# ‘நீட்’ ரத்து: சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டு காலமாக நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் தனியே போர் தொடுத்து வந்த நிலையில், நீட் தேர்வின் உண்மையான அவல நிலையை உணர்ந்து, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிரான எதிர்ப்பு கிளம்பி வருகின்றது. தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாக நாடு முழுவதும் எதிரொலிப்பதை அண்மை நிகழ்வுகள் காட்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**தலைவர்கள் வலியுறுத்தல்!**

“மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளே முடிவெடுத்து பழைய நிலையை மீண்டும் கொண்டு வர வேண்டும்” என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள், பிரதமருக்கே கடிதம் எழுதியுள்ளார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் எனப் பலரும் நீட் தேர்வை இரத்து செய்ய வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு பெற நாம் எடுத்த முயற்சிகளை வெற்றியடைய செய்யவும், தேசிய அளவில் நீட் தேர்வை அறவே அகற்றிடவும் தேவையான முன்னெடுப்பாக, இந்த மாமன்றம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றிய பின், பின்வரும் தீர்மானத்தை வாசித்தார்.

**தீர்மானம்**

“கிராமப்புற, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக்கல்வி வாய்ப்புகளை கடுமையாக பாதிக்கும் வகையிலும், பள்ளிக் கல்வியை அவசியமற்றதாக்கும் வகையிலும், மாநில மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் உரிமையை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் வகையிலும் அமைந்துள்ள நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும்.

இந்தத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து, பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12வது வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்வ தற்காக, இந்தச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வேண்டு மென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து பல முறைகேடுகளுக்கு வழி வகுத்து வரும் இந்தத் தேர்வு முறையை பல்வேறு மாநிலங்களும் தற்போது எதிர்த்து வரும் நிலையில், தேசிய அளவில் நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.”

> **நீட் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, அதனை அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். தி.மு.க. சார்பில் மட்டுமல்ல; கழக இளைஞரணி சார்பிலும் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, மாணவர் அணியையும், மருத்துவர் அணியையும் ஒருங்கிணைத்து, “நீட் விலக்கு நம் இலக்கு” என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், இத்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து - சட்டமன்றக் கட்சிகளின் சார்பில், கட்சிக்கு ஒருவர் எனும் வகையில், இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து உரையாற்றி வரவேற்றார்கள்.

அதனைத் தொடர்ந்து இத்தீர்மானம், பேரவைத் தலைவரால் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## நடப்பாண்டில் ஹஜ் பயணத்திற்காக 5,728 பேருக்கு மானியம்!

# சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக ‘திராவிட மாடல்’ அரசு திகழ்கிறது!

## சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம்!



**சென்னை, ஜூன் 29 -**

**சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு அரணாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது என்று சிறுபான்மை நலத்துறை மானியக் கோரிக்கையில் 8 புதிய அறிவிப்புகளை அறிவித்து அமைச்சர் செஞ்சி மஸ்தான் பதிலுரை யாற்றினார்:-**

அமைச்சர் செஞ்சி மஸ்தானின் பதிலுரை வருமாறு:

திராவிடஇயக்கத்தின்முன்னோடிகளான சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், சி. நடேசனார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர், முரசொலி மாறன் போன்ற தலைவர்கள் ஆகியோர் வழி நின்று தமிழ் இனம் காக்கும் மக்கள் முதல்வர், திராவிட நாயகர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வாழ்த்தி, சிறுபான்மையினர் நலன் தொடர்பான மானியத்தில் பங்கு கொண்டு பேசிய உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அமைச்சரவையில் மூத்த அமைச்சர்களாக இருக்கின்ற அவை முன்னவர் அவர்கள், அருமை பொதுச் செயலாளர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்கள்

### உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது!

கே.என். நேரு, எ.வ.வேலு, இ.பெரியசாமி மற்றும் சக அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நீதி காவலர் வி.பி. சிங் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைத்து, இன்று அவரது பிறந்தநாளில் மரியாதை செலுத்திய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, மரியாதைக்குரிய வி.பி. சிங் அவர்களது பிறந்தநாளில் சிறுபான்மையினர் நலன் குறித்த மானியத்தை இந்தப் பேரவையில் தாக்கல் செய்து, பேச வாய்ப்பைப் பெற்றதற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டில் கிறிஸ்தவர்கள். இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்கள் என்று ஐந்து வழியாக மத வழி சிறுபான்மையினரும், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராட்டி, சௌராஷ்ட்ரா மற்றும் உருது ஆகிய மொழிகளைப் பேசக் கூடிய ஆறு மொழி சிறுபான்மையினரும் வசித்து வருகின்றார்கள்.

“எல்லோருக்கும் எல்லாமே கிடைக்கச் செய்ய வேண்டும்” என்று திராவிட மாடல் ஆட்சியின்கீழ் சிறுபான்மையினர் உரிமைகளை, அவர்களுக்கான வழிபாட்டு உரிமையையும் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்பதில் தளபதியார் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உறுதி பூண்டுள்ளதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிறுபான்மையின மக்களின் பாதுகாப்புக்கு அரணாக விளங்குகிற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணிறைந்த திட்டங்களை வழங்கி வருகிறார்கள். ஒன்றிய அரசால் நிறுத்தப்படுகின்ற அல்லது குறைக்கப்படுகின்ற திட்டங்கள் தமிழ்நாட்டில் தடையின்றி தொடரும் வகையில் மாநில அரசின் நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாடுகளில் பெரும்பான்மையினருக்கு நிகராக சிறுபான்மையின மக்களையும் மேம்படுத்திக் கொள்ளுவதற்கானத் திட்டங்கள் இவ்வரசால் தொடர்ந்து நிறைவேற்ற ப் பட்டு வருகின்றது.

**சிறுபான்மையின மகளிர் கல்வி ஊக்குவிப்பு!**

கிராமப்புற பெண்கள், குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டும், தொடக்கக் கல்வி அளவில் சிறுபான்மை பெண் குழந்தைகளின் இடைநிற்றலை குறைக்கும் பொருட்டும், சிறுபான்மையின கிராமப்புற பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய இரு நிதி ஆண்டுகளில் 76 ஆயிரத்து, 663 மாணவியருக்கு 4 கோடியே, 82 லட்சத்து, 64 ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கணவனால் கைவிடப்பட்டு ஆதரவற்ற நிலையில் வசிக்கின்ற அல்லது வயது முதிர்ந்து ஏழ்மை நிலையில் உள்ள மகளிர் பயனடைகின்ற வகையில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு அந்தச் சங்கங்களால் திரட்டப்பட்ட திரள் நிதிக்கு இரண்டு மடங்காக 2022-2023 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக 7 கோடியே, 35 இலட்சத்து, 30 ஆயிரத்து 833 ரூபாயும், கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு 5 கோடியே, 12 லட்சத்து, 21 ஆயிரத்து 924 ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக 7,409 இஸ்லாமிய மகளிரும், 3,847 கிறிஸ்த்துவ மகளிரும் பயன்பெற்றுள்ளார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, 2023-2024 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக 9 கோடியே, 91 இலட்சத்து, 17 ஆயிரம் ரூபாய், கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கங்களுக்கு 4 கோடியே, 37 லட்சத்து, 63 ஆயிரம் ரூபாயும் வழங்கப் பட்டுள்ளன. இதன் வாயிலாக 9,517 முஸ்லிம் மகளிரும், 3,345 கிறிஸ்தவ மகளிரும் பயன் பெற்றுள்ளனர். இந்நிதியில் இருந்து பகிர்ந்தளிக்கப்படுகின்ற தொகை மகளிர் சிறு தொழில்கள் செய்து கொள்ள உதவுகின்றது.

சிறுபான்மையின மகளிரின் பொருளாதார சுயசார்புத் தன்மையை ஊக்குவிக்கும் பொருட்டும், தொழில்முனைவுத் திறனை வளர்க்கும் வகையிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையின வகுப்பைச் சேர்ந்த மகளிருக்கு கடந்த ஆண்டு ஒரு கோடியே 40 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் மின்மோட்டாருடன்கூடிய 2,500 தையல் எந்திரங்கள் வழங்கப்பட்டன. இவ்வரசு பதவியேற்றுக் கொண்ட நாளிலிருந்து 6,000 தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய பெருமக்கள் தங்கள் மார்க்க கடமைகளில் ஒன்றான புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள நிதியுதவி வழங்கும் பொருட்டு வழங்கப்படுகின்ற மானியம் 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தகுதிவாய்ந்த புனிதப் பயணிகளுக்கு இத்தொகை சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் ஹஜ் பயணம் மேற்கொண்டுள்ள 5,801 புனித பயணிகளில் 5,728 பயணிகள் மானியம் பெற தகுதி வாய்ந்தவர்கள். இவர்களது வங்கிக் கணக்குகளில் மானியம் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.

கிறிஸ்தவ மக்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள 2 கோடியே 33 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆயினும், தற்போது இஸ்ரேல்பாலஸ்தீன் இடையே நிலவி வருகின்ற இக்கட்டான சூழ்நிலையின் காரணமாக ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள இயலாத நிலை நீடித்து வருகிறது. விரைவில் இப்பிரச்சினை முடிவுக்கு வரும் என்று நம்புகிறோம்.

உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் 10,513 நபர்களுக்கு கடந்த ஆண்டு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மிதிவண்டி பெறாமல் விடுபட்ட உலமாக்கள் மற்றும் பணியாளர்களுக்கும், அடையாள அட்டை பெறாமல் இருந்தவர்களுக்கும், நல வாரிய உறுப்பினர்களாக புதுப்பித்துக் கொள்ளாதவர்களுக்கும் விரைவில் மிதிவண்டிகள் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலமா மற்றும் பணியாளர் நலவாரிய உறுப்பினர்கள் பயன்பெறத்தக்க வகையில் ஸ்கூட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென 7 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தலா 25,000 வீதம் மானியம் வழங்கப்படுகிறது.

உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் சீரிய முறையில் செயல்பட்டு வருவதைப்போல கிறிஸ்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தை மேனாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜிலா சத்யானந்த் அவர்களை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது, இவ்வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கு முதற்கட்டமாக 75 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

100 ஆண்டுகளுக்கும் பழமையான தேவாலயங்களை பராமரிக்க 2023 ஆம் ஆண்டில் நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் சென்னை வெஸ்ட்லி தேவாலயம்; திருநெல்வேலி கால்டுவெல் நினைவக தேவாலயம்; செங்கல்பட்டு மாவட்டம், ஆலந்தூர் புனித தோமையார்மலை தேவாலயம் மற்றும் கன்னியாகுமரியில் உள்ள புனித சவேரியார் தேவாலயம் ஆகிய நான்கு தொன்மையான தேவாலயங்களுக்கு ரூபாய் 6 கோடி ஒப்பளிக்கப்பட்டு முதல் தவணையாக மூன்று கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்த தேவாலயங்களுக்கு இரண்டாம் தவணை நிதி வழங்கப்படும் 2023-24ம் நிதியாண்டில் மதுரை புனித ஜார்ஜ் தேவாலயத்தை புதுப்பிப்பதற்காக ரூபாய் 2 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, 2024-2025 ஆம் நிதி ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் தேவாலயங்கள் புனரமைப்பதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் 15 ஆண்டுகளுக்கு உட்பட்ட, 20 ஆண்டு களுக்கு உட்பட்ட மற்றும் 20 ஆண்டுகளுக்கும் பழமையான என்ற கால வரையறைக்குள், தகுதி வாய்ந்த தேவாலயங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் ரூபாய் இரண்டு இலட்சம், நான்கு இலட்சம் மற்றும் ஆறு லட்சம் என்ற தொகையினை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இப்போது முறையே ரூபாய் 10 இலட்சம், ரூபாய் 15 இலட்சம் மற்றும் ரூபாய் 20 இலட்சம் என்று உயர்த்தி வழங்குவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்துள்ளார்கள். அதற்கும் துறைசார் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

கிறிஸ்தவர்களுக்கான கல்லறை தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைப்பதற்காக நிலம் இல்லாத பகுதிகளில் தனியார் நிலத்தை வாங்குவதற்காக அரசின் பங்களிப்பு வழங்கும் பொருட்டு ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, 2021-2022 ஆம் நிதி ஆண்டில் 15 தர்காக்கள் ஒரு கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவிலும், 62 மசூதிகள் 4 கோடியே, 89 இலட்சம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 6 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் நிதி ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகையான 6 கோடி ரூபாயில் நாகப்பட்டினம் மாவட்டம், நாகூர் தர்காவை புனரமைக்க 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையான 4 கோடி ரூபாய், தொன்மையான 7 தர்காக்களுக்கு வழங்க அரசு பரிசீலித்து வருகிறது. விரைவில் இந்த 7 தர்காக்களுக்கும் மராமத்து தொகை வழங்கப்படவுள்ளது.

2023-2024 ஆம் நிதி ஆண்டில் 16 தர்காக்கள் ஒரு கோடியே 32 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவிலும், 118 மசூதிகள் 8 கோடியே 67 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 10 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

பேரவைத் தலைவர் அவரகளே, கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் தேதி மற்றும் பிப்ரவரி மாதம் 17 ஆம் தேதி ஆகிய நாட்களில் சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தனித்தனியே நடைபெற்ற கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய அறிஞர்கள் உடனான கலந்தாய்வில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தேவாலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட வழிபாட்டு தளங்களை கட்டுவதற்கும், புனரமைப்ப தற்கும் 7.3.2024 அன்று S.O.P. வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் கட்டுமானப் பணிகள் செய்வதற்கு சட்டங்களைத் தளர்த்தி, எளிதாக்கப்பட்டுள்ளதற்கு சமுதாயம் சார்பாக நேரடியாக முதலமைச்சர் அவர்களை சந்தித்து தெரிவிக்க இருந்த செய்தியும் இதில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

தற்போது கல்லறைத் தோட்டங்கள் மற்றும் அடக்க ஸ்தலங்கள் இல்லாத மாவட்ட தலைநகரங்களில் தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மாநகராட்சி அல்லது நகராட்சி சார்பில் கல்லறை தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 100 ஆண்டுகள் பழமையான தேவாலயங்களைப் புதுப்பிக்க - புனரமைக்க நிதி ஒதுக்கீடு!

கபர்ஸ்தான்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல், கல்லறைத் தோட்டங்கள் மற்றும் முக்கிய சாலைகளுடன் அவற்றை இணைக்கும் பாதைகளை சீரமைத்தல் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூபாய் ஒரு கோடி நிதியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ளார்கள்.

மத வழி மற்றும் மொழிவழி சிறு பான்மையின சமூகத்தினர் நடத்தி வருகின்ற கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ் வழங்கும் நடைமுறையை எளிமையாக்கியதுடன், இணைய வழியிலேயே இவற்றிற்கான விண்ணப்பங்களும் பெறப்படுகின்றன. இந்த சான்றிதழ்கள் காலம் குறிப்பிடாமல் நிரந்தரச் சான்றிதழாக வழங்குவதற்கும் முதலமைச்சர் அவர்கள் ஆணையைப் பிறப்பித்துள்ளார்கள்.

எனவே இப்படிப்பட்ட சிறந்தப் பணிகளை செய்து வருகின்ற சிறபான்மை யினர் நலத் துறை சார்பாக இதை நான் பதிவு செய்து இருக்கிறேன். இம்மாமன்ற உறுப்பினர்கள் 17 பேர் சிறுபான்மை நலன் குறித்த இந்த மானியத்தின் மீது 14 வெட்டு தீர்மானங்களை கொடுத்திருக்கின்றீர்கள்.

எனது பதில் உரையில் நீங்கள் எழுப்பியுள்ள ஐயங்களுக்கு பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகிறேன். உறுப்பினர்கள் வெட்டு தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று பேரவை தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மாமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினர் நலத் துறை சிறப்பாக செயல்பட சிறப்பான தமது பங்களிப்பை நல்கி வந்த திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், துறையின் தற்போதைய செயலாளர் விஜய ராஜ் குமார் , சிறுபான்மை நலத் துறையின் இயக்குனர் திருமதி ஆசியா மரியம், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் தலைவர் அப்துல் ரகுமான், வாரிய உறுப்பினர்களுக்கும், வக்ஃப் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் டாக்டர். தாரேஸ் அகமது, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர்சட்டமன்ற பேரவை உறுப்பினர் அப்துல் சமது, ஹஜ் குழு உறுப்பினர்களுக்கும், ஹஜ் குழுவின் செயலாளர் சித்திக், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் , ஆணைய உறுப்பினர்களுக்கும், அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா ,

முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் முருகானந்தம், டாக்டர் உமாநாத், சண்முகம், திருமதி. அனு ஜார்ஜ், முதலமைச்சர் அவர்களின் தனி உதவியாளர் தினேஷ் குமார், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள், கிறிஸ்தவ பணியாளர்கள் நல வாரியத்தின் உறுப்பினர்கள் மற்றும் சிறுபான்மை நலத் துறையில் பணிபுரிந்து வருகின்ற அனைத்து அரசு அலுவலர் களுக்கும் இந்தத் தருணத்தில் எனது நன்றி கலந்த வணக்கத்தினையும் தெரிவித்துக் கொண்டு, நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, இந்த மாமன்றத்தில் தொடர்ந்து பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த எல்லாம் வல்ல இறைவனுக்கும், என்னை ஈன்றெடுத்த தாய் தந்தைக்கும், என்னை தொடர்ந்து, 1986 முதல் இதுவரையிலும் நான் நின்ற ஏழு தேர்தல்களில் தொடர்ந்து எனக்கு வாக்களித்து வெற்றிப் பெறச் செய்கின்ற செஞ்சித் தொகுதி மக்களுக்கும், விழுப்புரம் மாவட்ட மக்களுக்கும், என்னை அமைச்சர் என்ற நிலைக்கு உயர்த்திக்கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர், மக்கள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, இங்கே அறிவிப்புகளை வெளியிட, வாசிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**அறிவிப்புகள்**

1. சிறுபான்மையின மகளிரின் பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்யும் வகையில் குழுக்கள் அமைத்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation) மூலம் தேவையான பயிற்சி அளித்து, மின்மோட்டாருடன்கூடிய ஒரு தையல் இயந்திரம் ரூ.6,400 மதிப்பில் 2,500 மகளிர் பயன்பெறும் வகையில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தியும் மற்றும் மூக்கு கண்ணாடி உதவித்தொகை 500 ரூபாயிலிருந்து 750 ரூபாயாக உயர்த்தியும் வழங்கப்படும்.

3. கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகள் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படும். ஓய்வூதியத்தொகை ரூ.1,000/ லிருந்து ரூ.1,200/. மூக்கு கண்ணாடி உதவித்தொகை ரூ.500/லிருந்து ரூ.750/. இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை ரூ.20,000/லிருந்து ரூ.30,000/. விபத்து மரணத்திற்கான உதவித்தொகை ரூ.1,00,000/லிருந்து ரூ.1,25,000/.

மேலும், இவ்வாரிய உறுப்பினர்களின் குடும்பத்தைச் சார்ந்த 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு ரூ.1,000/ கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

4. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் மற்றும் கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இணையவழியில் செயல்படுத்திட தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் தனி மென்பொருள் (Software) மற்றும் வலைதளம் (Web-Portal), 25 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

5. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி கடலூர் மாவட்டத்தில் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு 3 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

6. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நூறு மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி 56 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவங்கப்படும்.

7. முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிரின் நலனை கருத்தில் கொண்டு திருப்பூர், திருவள்ளூர், வேலூர், திண்டுக்கல், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மதுரை மற்றும் ஈரோடு ஆகிய 8 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மற்றும் திருவள்ளூர் மற்றும் சிவகங்கை ஆகிய 2 மாவட்டங்களில் கூடுதலாக தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் 10 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவக்குவதுடன் இச்சங்கங்களுக்கு இணைமானியம் இருமடங்காக 1:2 என்ற விகிதாசாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு 20 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படும்.

8. தமிழ்நாட்டில் மக்கள் அதிகம் வரும் தொன்மையான பின்வரும் 6 தர்காக்களில் தேவையின் அடிப்படையில் தங்கும் இடம், சீருந்து நிறுத்தும் இடம், கழிப்பிடம் மற்றும் குளியல் அறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும். இதற்காக அரசு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் வழங்கப்படும். மீதம் தேவைப்படும் தொகை வக்ஃப் வாரியத்தின் நிதியிலிருந்து செலவிடப்படும்.

1.ஹஸ்ரத் தமீம் அன்சாரி தர்கா, கோவளம், காஞ்சிபுரம் மாவட்டம்,

2.ஹஸ்ரத் ஷேக் தாவூத் கமில் வலியுல்லாஹ் தர்கா, முத்துப்பேட்டை, திருவாரூர் மாவட்டம்,

3.ஹஸ்ரத் சையத்அலி பாத்திமா நாச்சியார் தர்கா, ஆத்தங்கரை பள்ளிவாசல், ராதாபுரம், திருநெல்வேலி மாவட்டம்.

4.ஹஸ்ரத் நூர் முகமதுஷா அவுலியா தர்கா, பன்ருட்டி, கடலூர் மாவட்டம்

இவ்வாறு அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் பதிலுரை வழங்கினார்.